அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 317

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
10, டிசம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

மீளாய்ந்த தாபன விதிக்கோவை: பகுதி 1-(ஆங்கிலம்)

ஆங்கில மொழியில் தாபன விதிக்கோவையின் 'பகுதி 1-ஐ (சுட்டெண்களுடன்) அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் அரசாங்க அச்சகத்தார் கிடைக்கும் வழி செய்வார்கள். 31-ஆகஸ்ட் 1985ஆம் திகதி வரை செய்யப்பட்ட திருத்த நறுக்குகள்/சுற்றறிக்கைகள் என்பவற்றில் உள்ள திருத்தங்கள் அனைத்தும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

02. மீளாய்ந்த விதிக்கோவையின் பகுதி 1-இல் உள்ள அத்தியாயங்கள் 1முதல் XXXIII வரை தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டுள்ளது. முந்திய விதிக்கோவையின் சில அத்தியாயங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மளாய்ந்த விதிக்கோவையின் ஒவ்வொரு அத்தியாயத்தினதும் தலைப்பும் இலக்கமும், தற்போது நடைமுறையிலுள்ள விதிக்கோவையில் அதனுடன் தொடர்புடைய அத்தியாயத்தின் இலக்கமும் வருமாறு:-

| தலைப்பு | அத்தியாயத்தின் இலக்கம் | |
|---|---|---|
| | மீளாய்ந்த விதிக்கோவை | பழைய விதிக்கோவை |
| பொது | I | I |
| ஆட்சேர்ப்பு, நடைமுறைகளும் நியமிப்புகளும் | II | II |
| இடமாற்றங்கள் | III | III |
| மாதசம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தரத் தகுதிநிலை, ஓய்வூதியம் பெறுநிலை ஆதியன வழங்கல் | IV | IV |
| விடுபாடு மீள்வு, தொழில் முடிவுறுகை | V | V |
| சேவைப் பதிவுகள், அறிக்கைகள் சான்றிதழ்கள் | VI | VI |
| வேதனம் | VII | VII |
| மேலதிக நேரம், விடுமுறை, விடுமுறைச் சம்பளம், படிகள் | VIII | VIII ம X |
| கட்டணங்கள் | IX | IX |
| யூரிமார், சாட்சிகள், உத்தியோக முறையற்ற நடுவர்கள், விசாரணையாளர் என்போர்க்கும் பலவினச் சேவைகளுக்குமான கொடுப்பனவுகள் | X | XLVI |
| செலவு மீளளிப்புகளும் நட்டஈடும் | XI | XXIX ம XXX |

| | | |
|---|---|---|
| லீவு | XII | XII |
| புகைவண்டி ஆணைச்சீட்டுக்கள் | XIII | XIII |
| கடமைப்பொருட்டு உள்நாட்டிற் பிரயாணம் | XIV | XIV |
| படிப்பு, பயிற்சி அல்லது கடமைப் பொருட்டான வெளிநாட்டுப் பிரயாணம் | XV | XV |
| விடுமுறைப் பிரயாணம் | XVI | XVII |
| சலுகைப் பருவச் சீட்டுக்கள் | XVII | XXVII |
| உத்தியோக வதிவிடங்கள் | XVIII | XVIII |
| அரசாங்க இல்லங்கள் | XIX | XIX |
| விடுமுறை வங்களாக்கள் | XX | XX |
| பாதுகாப்பு உடையும் கோல உடையும் | XXI | XXII |
| நலனோம்பு வசதிகள் | XXII | XXIII |
| சிலவகைநோய்களால் பீடிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலான விசேட சலுகைகள் நிபந்தனைகள் | XXIII | XXIV |
| வேதனக் கடன்கள்/முற்பணம் | XXIV | XXV |
| தொழிற்சங்க உறுப்பினர்களுக்குள்ள சலுகைகள் | XXV | XXI |
| மருத்துவப் பராமரிப்பும் உத்தியோகத்தர் சேவை செய் உடற்றகுதி நோக்குதற்கான மருத்துவப் பயிற்சி | XXVI | XXVIII ம் XLI |
| தொடர்பிணைப்பு வழிகள் | XXVII | XXXVIII |
| நிருவாக நடைமுறைகள் | XXVIII | XXXIX |
| காணி கொள்ளல், முதலீடு செய்தல் ஈடு வைத்தல் | XXIX | XXXIII |
| அரசாங்க பணியாளர் மீது கொண்டுள்ள உரிமைகள் | XXX | XVI |
| அவை நடத்துகை, கருத்து வெளியீட்டு உரிமைகளைப் பிரயோகித்தல் | XXXI | XXXV |
| அரசியல் உரிமைகளைப் பிரயோகித்தல் | XXXII | XXXVI |
| சட்ட மதியுரையும் சட்ட நடவடிக்கைகளும் | XXXIII | XLIII ம் XLIV |

03. அத்தியாயம் 1 பிரிவு 2 கோவையின் திருத்தங்கள் பற்றிப் பகுத்து விளக்குகிறது. தாபனக்கோவையில் திருத்தம் கொண்டு வரும் சுற்றறிக்கைக்குப் பெரிதும் தாமதமாகியே அச்சிட்ட திருத்தம் உங்களை அடைவதால் ஒரு சுற்றறிக்கை கிடைத்ததும் சுற்றறிக்கைகளைக் கொண்ட கோவையை நாளது வரையிலாக்குவது ஒரு புறமிருக்க, தாபனக் கோவைக்குத் திருத்தம் கொண்டுவரும் சுற்றறிக்கை எதுவானலும் அதன் இலக்கமும் திகதியும் புதிய கோவையில் உரிய இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒப்பம்: டி.பி.ஐ.பீ.எஸ்.சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.